# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 16 செவ்வாய்க்கிழமை 02.12.2025 கதிர் 387







# யாழில் இளைஞர் வெட்டிப் படுகொலை: பிரதான சூத்திரதாரி உட்பட 6 பேர் கைது!





யாழ்ப்பாணம், டிச. 02

யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் நேற்றுமுன்தினம் பட்டப்பகலில் இளைஞர் ஒருவர் ஓட ஓட வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பிரதான சூத்திரதாரி உள்ளிட்ட 6 பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

படுகொலைச் சம்பவத்துக்கு பின்னர் இந்தக் கும்பல் ஹயஸ் வானில் யாழ்ப்பாணம் மாவட்டத்தை விட்டு வெளி மாவட்டத்துக்குத் தப்பிச் சென்றபோது யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளது.

இதன்போது ஹயஸ்வாகனம், இரண்டு மோட்டார் சைக்கிள்கள், கொலைக்கு பயன்படுத்தப்பட்ட கத்தி, ஆடைகள் என்பன பொலி ஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நீண்டகாலமாக இரண்டு வன்முறைக் கும்பலிடையே காணப்பட்ட பகைமை உணர்வே இந்தக்கொலைச்சம்பவத்துக்குக் காரணம் என்பது ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:-

யாழ்ப்பாணத்தில் சில மாதங்களுக்கு முன்பு இரண்டு வன்முறைக் கும்பலைச் சேர்ந்த நபர்களிடையே மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான காணொளி சமூக வலைத்தளங்களில் பரவியநிலையில்ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அந்தச் சந்தேக நபருக்குப் பிணை வழங்க மற்றைய தரப்பு தொடர்ச்சியாக நீதிமன்றத்தில் ஆட்சேபம் தெரிவித்து வந்துள்ளது.

அதற்குப்பழிதீர்க்கும்முகமாக சிறைக்குள் உள்ள நபரின் வழிகாட்டலுக்கமைய தெல்லிப்பழையில் வட்டித் தொழில் செய்யும் ஒருவரிடம், பழி தீர்க்கும் கொலைத் தாக்குதலுக்கான திட்டம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த வன்முறைக் கும்பலைச் சேர்ந்த நபர்கள் இணைக்கப்பட்டு தாக்குதலுக்கான திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

கொலை செய்யப்பட்ட நபரின் வீட்டுக்கு அருகில் வசிக்கும் நபர் ஒருவரும் இதற்கு ஒத்துழைத்துள்ளதுடன் பிரத்தியேக கையடக்கத் தொலைபேசிகள், சிம்கள் வாங்கப்பட்டு அதன் ஊடாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை திட்டமிட்டபடி தாக்குதல் சம்பவம் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது.

கொலைச் சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களைத் திட்டத்தை மேற்கொண்ட வட்டித் தொழில் செய்பவர் தனது ஹயஸ் வாகனத்தில் ஏற்றி தப்பிச் சென்றுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தாலும் யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் தனியான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சம்பவ இடத்தில் பதிவான காணொளி, கொல்லப்பட்ட நபரின் பின்னணி என்பவற்றை வைத்து தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் நேற்று இந்தக் கொலையைப் புரிந்தவர்கள், ஒத்துழைத்தவர்கள், திட்டம் தீட்டிய வர்கள் என்ற சந்தேகத்தில் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

7➤

# இயற்கையின் கோரத் தாண்டவம்: பலி எண்ணிக்கை 410 ஆக உயர்வு



கொழும்பு, டிச. 02

நாட்டில்நிலவிய மோசமான காலநிலை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 410 ஆக உயர்ந்துள்ளது.

மேலும்,336பேர்காணாமல்போயுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் இன்று காலை வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், 4 இலட்சத்து 7 ஆயிரத்து 594 குடும்பங்களைச் சேர்ந்த 14 இலட்சத்து 66 ஆயிரத்து 615 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே 1,441 பாதுகாப்பு தங்குமிடங்களில், 64 ஆயிரத்து 483 குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 33 ஆயிரத்து 15 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

## மன்னார் மாவட்ட அனர்த்தம் தொடர்பில் அரச அதிபர் தலைமையில் கலந்தாய்வு




மன்னார், டிச. 02

மன்னார் மாவட்டத்தில் டித்வா புயலால் உருவாகியுள்ள அனர்த்த நிலைமைகள் தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல் இன்று மன்னார் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடல் மன்னார் மாவட்ட அரச அதிபர் க. கனகேஸ்வரன்

7➤

## இடைநிறுத்தப்பட்ட பரீட்சைகளை ஜனவரி மாதத்தில் நடத்த முடிவு!




கொழும்பு, டிச. 02

இயற்கைப் பேரிடரால் இடைநிறுத்தப்பட்ட ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் மீதமுள்ள பாடங்களை 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை இன்று

7➤

## ராஜபக்ஷக்களின் சகா ரத்நாயக்க கைது!

கொழும்பு, டிச. 02

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின்சிரேஷ்ட உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான சி.பி. ரத்நாயக்க இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் இன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் நடத்தப்பட்டு வரும் விசாரணை ஒன்று தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக சி.பி. ரத்நாயக்க, அந்த ஆணைக்குழுவில் முன்னிலையாகியிருந்த போது அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.





# பாடசாலைகள் மீள ஆரம்பமாகும் திகதி தொடர்பான தீர்மானம்

கொழும்பு, டிசெ.2

பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான திகதியை திருத்துவது தொடர்பில் இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ தெரிவித்துள்ளார்.

அதன்படி, முன்னர் அறிவிக்கப்பட்ட படி டிசம்பர் 16ஆம் திகதி பாடசாலைகளை ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், பாடசாலைகளை ஆரம்பிப்பது குறித்து இன்றும் (02) ஒரு கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மாகாண மட்டத்திலான பாடசாலைகளையாவது ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கல்விச் செயலாளர் 'அத தெரணவுக்கு தெரிவித்தார் .(ஐ)



# நிவாரணக் குழுக்களுக்கு பொலிஸாரின் அறிவுறுத்தல்

கொழும்பு, டிசெ.2

அனர்த்தம் ஏற்பட்ட பகுதிகளில் வீதிகளைச் சீரமைக்கும் பணிகள் இடம்பெற்று வரும் நிலையில், பெரும் எண்ணிக்கையிலான நிவாரணக் குழுக்கள் வருகை தருவது அந்தப் பணிகளுக்குத் தடையாக உள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், உதவிப் பொலிஸ் அத்தியட்சகருமான எஃப். யூ. வூட்லர் தெரிவிக்கையில்,

இந்த நிவாரணக் குழுக்களின் பணிக்குத் தமது மரியாதைக்குரிய நன்றியைத் தெரிவிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், சில மாவட்டங்களில் வீதி புனரமைப்புப் பணிகள் நடைபெறும் பகுதிகளுக்கு அதிகளவான வாகனங்கள் வருவது அந்தப் பணிகளுக்குத் தடையாக உள்ளது என்றும், அத்துடன் சில மோட்டார் சைக்கிளில் செல்வோர் அனர்த்தம் ஏற்பட்ட இடங்களை அவதானிப்பதும், அவற்றை காணொளியாகப் பதிவு செய்வதும் அங்கு கடமையாற்றும் குழுவினருக்குத் தடையாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு செல்பவர்களுக்கும் இந்த நிலைமை ஆபத்தானது என்று தெரிவித்த அவர், எனவே, நிவாரணக் குழுக்கள் அந்தந்தப் பிரிவுகளுக்கு பொறுப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளைத் தொடர்புகொண்டு மக்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.

அனர்த்த நடவடிக்கைப் பிரிவைத் தொடர்புகொண்டு நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தொடர்புகளுக்கு -
071- 8595884
071- 8595883
071- 8595882
071- 8595881
071- 8595880

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீடீ) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden - Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# மண்ணில் புதைந்த குடும்பம் இன்று வரை மீட்க முடியாத அவலம்! தீவிர தேடுதலில் இராணுவம்

கொழும்பு, டிசெ.2

நாட்டில் ஏற்பட்ட கடும் மழை காரணமான கந்தப்பளை - சந்திரிகாமம் பகுதியில் காணாமல் போன குடும்பங்களை தேடும் நடவடிக்கையை இராணுவம் தற்போது ஆரம்பித்துள்ளது.

தாய், இரண்டு குழந்தைகள் மற்றும் பாட்டி ஆகியோரே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

நுவரெலியா சிங்கப் படையணியைச் சேர்ந்த படையினர் நேற்று (01) முதல் தேடுதல் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கடந்த 27ஆம் திகதி மதியம் குறித்த பகுதியில் பெய்த பலத்த மழையினால் இந்த வீடு மண்ணுக்குள் புதையுண்டதாகவும், அந்த நேரத்தில் அவர்கள் அனைவரும் வீட்டினுள் இருந்ததாகவும் பிரதேசமக்கள் தெரிவிக்கின்றனர். (ஐ)



## அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களுக்கு நீர்ப்பாசனம் மற்றும் காணி பிரதி அமைச்சர் கள விஜயம்!

நீர்ப்பாசனம் மற்றும் காணி பிரதி அமைச்சர் அரவிந்த செனரத் விதாரண திங்கட்கிழமை(1) அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களுக்கு கள விஜயம் மேற்கொண்டிருந்தார்.

நிலவிவரும் சீரற்ற காலநிலை, வெள்ளப்பெருக்கு மற்றும் தொடர்மழை போன்ற பல இயற்கை அனர்த்தங்களை முகம் கொடுக்கும் அம்பாறை மாவட்ட மக்களை பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா, நீர்ப்பாசனம் மற்றும் காணி பிரதி அமைச்சர் அரவிந்த செனரத் விதாரண ஆகியோர் நேரில் சந்தித்து அவர்களுக்கான அடிப்படை வசதிகளை மீள் உறுதி செய்தல் தொடர்பான நடவடிக்கையும் மேற்கொள்ளப் பட்டது.

இவ் விஜயத்தின் போது தேசிய மக்கள் சக்தியின் பிரதேச ஒருங்கிணைப்பாளர்கள், பிரஜா சக்தி தவிசாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ)



## நாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு பற்றாக்குறை இல்லை! அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.2

நாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு பற்றாக்குறை இல்லை என வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

பேரிடர் சூழ்நிலை காரணமாக அடைய முடியாத பகுதிகளுக்கு பாதுகாப்புப் படையினரின் உதவியுடன் தீவு முழுவதும் அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலைமை காரணமாக அத்தியாவசிய உணவுப் பொருட்களை விநியோகிப்பதில் ஏற்பட்டுள்ள சிரமங்கள் மற்றும் தட்டுப்பாடு இல்லாமல் நுகர்வோருக்கு உணவுப் பொருட்கள் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்துச் சிறப்புக் கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

இந்த கலந்துரையாடலானது, அத்தியாவசிய உணவு இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் சங்கத்திற்கும் வர்த்தகம், வர்த்தகத்துறை, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டுத் துறை அமைச்சர் வசந்த சமரசிங்கவிற்கும் இடையில் நடைபெற்றது.

நிவாரணத்திற்காக உணவுப் பொருட்களை வழங்குதல் மற்றும் சுற்றுலாத் துறைக்குத் தேவையான உணவுப் பொருட்களை வழங்குதல் போன்ற தேவைகள் குறித்தும் கலந்துரையாடல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

நுகர்வோருக்குச் சிரமத்தை ஏற்படுத்தாமல் நியாயமான விலையில் இந்த உணவுப் பொருட்களை வழங்குவதற்கான செயல்முறை குறித்தும் விவாதங்கள் நடத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

## அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட நாடாளுமன்ற ஊழியர்களுக்கு நிவாரண நடவடிக்கை

கொழும்பு, டிசெ.2

பல்வேறு பகுதிகளில் வசிக்கும் சுமார் இருபது பாராளுமன்ற ஊழியர்கள் வெள்ளம் உள்ளிட்ட பல்வேறு வானிலை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்கிடையில், வானிலை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட நாடாளுமன்ற ஊழியர்கள் உள்ளிட்ட மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களை மற்ற ஊழியர்களின் பங்கேற்புடன் சேகரிக்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. (ஐ)

## மின்சாரம் மற்றும் எரிவாயு அபாயம் வெள்ளம் சூழ்ந்த பகுதி மக்களுக்கு எச்சரிக்கை!



நாடு முழுவதும் வெள்ளம் சூழ்ந்த பகுதி மக்கள் மின்சாரம் மற்றும் எரிவாயு தொடர்பில் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மின்சாரம் மற்றும் எரிவாயு பாதுகாப்பு குறித்து சிறப்பு கவனம் செலுத்துமாறு பொலிஸ்பிரிவு ஒரு அறிவிப்பை வெளியிட்டு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மின் மூலங்களை அணுகுவதற்கு முன் அதிகாரபூர்வ மின் தொழில்நுட்ப வல்லுநரின் பரிசோதனையைப் பெற வேண்டும்.

அத்துடன் ஈரமான மின்சாதனங்களைப் பயன்படுத்த வேண்டாம் என்றும் எரிவாயு கசிவு ஏற்பட்டால், மின்சாரம் அல்லது எரிவாயு மூலம் இயங்கும் எந்த உபகரணங்களையும் இயக்குவதைத் தவிர்க்குமாறும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கடற்பரப்பை அண்டியவர்களுக்கு தொடரும் எச்சரிக்கை இன்றும் பல பகுதிகளில் மழைக்கு வாய்ப்பு

வடக்கு மற்றும் தென் மாகாணங்களில் இன்று (2) இடைக்கிடையே மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

ஊவா, வட மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில இடங்களில் பிற்பகல் 2:00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது.

மேல், மத்திய, சப்ரகமுவ, ஊவா, வடமேல் மற்றும் தென் மாகாணங்களில் அத்துடன் அம்பாறை மாவட்டத்தின் சில இடங்களில் அதிகாலையில் பனிமூட்டமான வானிலை நிலவக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் திருகோணமலையிலிருந்து காங்கேசந்துறை ஊடாக மன்னார் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் களுத்துறையிலிருந்து காலி மற்றும் மாத்தறை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்குத் திசையிலிருந்து வீசக் கூடிய சாத்தியம் காணப்படுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 25-35 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகள் சாதாரண முதல் மிதமான அலை வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற் பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அக்கடற் பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# முதல்வர் பதவி குழப்பம் நீங்குமா? சிவகுமார் உடன் கருத்து வேறுபாடு இல்லை என்கிறார் சித்தராமையா



நாங்கள் இருவரும் 2028ம் ஆண்டு தேர்தலில் காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டும் என்ற நோக்கத்தில் பயணிக்கிறோம். எங்களுக்குள் வேறுபாடு இல்லை என முதல்வர் சித்தராமையா தெரிவித்துள்ளார்.

கர்நாடகாவில் முதல்வர் பதவிக்கு மோதல் நீடித்து வருகிறது. முதல்வர் சித்தராமையா, துணை முதல்வர் சிவகுமார் ஆகிய இருவரது ஆதரவாளர்கள் போரக்கொடி தூக்கினர். இந்த சூழலில், இன்று (டிச.,02) சித்தராமையா, சிவகுமார் ஆதரவாளர்கள் இருவரும் சேர்ந்து காலை உணவு சாப்பிட்டுள்ளனர். இன்று சிவகுமாரின் அழைப்பை ஏற்று அவரது வீட்டுக்கு சித்தராமையா வருகை தந்தார். இவரும் ஒன்றாக அமர்ந்து காலை உணவு சாப்பிட்டனர். பின்னர் நிருபர்கள் சந்திப்பில் சித்தராமையா கூறியதாவது:

காலை விருந்து சிறப்பாக அமைந்தது. இந்த குழப்பத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க இருவரும் விரும்புகிறோம். எங்கள் நோக்கம் தெளிவாக இருக்கிறது. உள்ளாட்சி தேர்தலே மிகவும் முக்கியம். இது தொடர்பாக நாங்கள் விவாதித்தோம். நாங்கள் இருவரும் 2028ம் ஆண்டு தேர்தலில் காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டும் என்ற நோக்கத்தில் பயணிக்கிறோம். எங்களுக்குள் வேறுபாடு இல்லை.

காங்கிரசில் நாங்கள் ஒரே குரலாக இயங்கி வருகிறோம். கட்சியில் எந்த வித்தியாசமும் இல்லை. இது ஊடகங்கள் கிளப்பி விடுவது ஆகும். அமைச்சரவை மறுசீரமைப்பு குறித்து காங்கிரஸ் உயர்மட்டம் முடிவு செய்ய வேண்டும். எதிர்காலத்திலும் நாங்கள் ஒன்றாக அரசை நடத்துவோம். எங்கள் அனைத்து எம்.எல்.ஏ.க்களும் ஒன்றுபட்டுள்ளோம், நாங்கள் ஒன்றாக எதிர்ப்பை எதிர்கொள்வோம். காங்கிரஸ் மேலிடத்தின் உத்தரவை கடைபிடிப்பேன். அவர்களை சந்திக்கச் செல்வேன். இவ்வாறு சித்தராமையா கூறினார். (ஐ)

# கட்சி விரோத செயலில் ஈடுபடுவோரை களைய குழு அமைத்தார் தமிழக பா.ஜ., தலைவர்



கட்சி விரோத செயல்களில் ஈடுபடுவோரை களையெடுக்க, தமிழக பா.ஜ.,வில், மாநில துணைத் தலைவர் எம்.சக்கரவர்த்தி தலைமையில், ஐந்து பேர் அடங்கிய ஒழுங்கு நடவடிக்கை குழு அமைக்கப்பட்டு உள்ளது.

தமிழகத்தில் சட்டசபை தேர்தலுக்கு, நான்கு மாதங்களே உள்ளன. எனவே, உட்கட்சி விவகாரம், கூட்டணி கட்சிகள் மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள் தொடர்பாக, பொது வெளியில் கருத்து தெரிவிக்க கூடாது என, தமிழக பா.ஜ.,வினரை, அக்கட்சி மேலிடம் அறிவுறுத்தி உள்ளது.

இருந்த போதும், திருவள்ளூர் மேற்கு மாவட்டம், திருவேற்காடு மண்டலத்தை சேர்ந்தவரும், கட்சியின் முன்னாள் தலைவர் அண்ணாமலையின் தீவிர ஆதரவாளருமான ஜானி ராஜா என்பவர், அ.தி.மு.க., தலைமைக்கு எதிராக கருத்து வெளியிட்டார். கூடவே, பா.ஜ., தலைமையின் செயல்பாடுகளை விமர்சித்தும் சமூக வலைதளப் பக்கங்களில் கருத்து பதிவிட்டார்.

இதன் காரணமாக, அவரை கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து, நவ.,28ல், தமிழக பா.ஜ., தலைவர் நயினார் நாகேந்திரன் நீக்கினார். 'கட்சி அடிப்படை விதிகளின்படி, தன்னை நீக்க, மாநிலத் தலைவருக்கு அதிகாரம் இல்லை. ஒழுங்கு நடவடிக்கை குழுவுக்கு தான் அதிகாரம் உள்ளது.

அடிப்படையான இந்த விஷயம் கூட தெரியாமல், நாகேந்திரன் என்னை கட்சியில் இருந்து நீக்கி உள்ளார்' என, ஜானி ராஜா தெரிவித்தார். அதைத் தொடர்ந்து, தமிழக பா.ஜ.,வில், ஒழுங்கு நடவடிக்கை குழு அமைக்கப்பட்டுள்ளது.

குழுவின் தலைவராக மாநில துணைத்தலைவர் எம்.சக்கரவர்த்தி, உறுப்பினர்களாக மாநிலப் பொருளாளர் எஸ்.ஆர்.சேகர், தேசிய பொதுக்குழு உறுப்பினர்கள் திருமலைசாமி, ராஜலட்சுமி, மாநில செயற்குழு உறுப்பினர்கள் சிவகாமி பரமசிவம், குப்புராமு ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து பா.ஜ., நிர்வாகி ஒருவர் கூறுகையில், "முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை ஆதரவாளர்களுக்கும், இந்நாள் தலைவர் நயினார் நாகேந்திரன் ஆதரவாளர்களுக்கும் இடையே, பா.ஜ.,வினர் இரு குழுக்களாக பிரிந்து, மோதி வருகின்றனர். சமூக வலைதளம் வாயிலாக மாறி மாறி விமர்சித்து வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாகத்தான் ஜானி ராஜா மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. தற்போது ஒழுங்கு நடவடிக்கை குழு அமைத்திருக்கும் நாகேந்திரன் அடுத்தடுத்தும் நடவடிக்கைகளைத் தொடருவார்," என்றனர். (ஐ)



# 'நீதிக்கு முன் சோனியா, ராகுலின் கறைபடிந்த கைகள் கட்டப்படும்'

'சோனியா, ராகுல் ஆகியோரின் கறைபடிந்த கைகள், நீதிக்கு முன் கட்டப்படும்' என, தமிழக பா.ஜ., தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடி ஆட்சியில், காங்கிரசார் செய்த அனைத்து ஊழல்களுக்கும் பதில் கூறியே ஆக வேண்டும். 'நேஷனல் ஹெரால்டு' பத்திரிகை நிறுவன சொத்துக்களை அபகரித்ததாக, அமலாக்க துறை அளித்த புகாரில் தாக்கல் செய்துள்ள குற்றப்பத்திரிகை துவக்கம் தான். 'நேஷனல் ஹெரால்டு' வழக்கில், சோனியா மற்றும் ராகுலின் கறைபடிந்த, 'கை'கள் நீதிக்கு முன் கட்டப்படும். ஊழல் என்னும் களை பிடுங்கி எறியப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. அவரது மற்றொரு அறிக்கை: 'எளிய விவசாய குடும்ப பின்னணியில் இருந்து வந்து, வாழ்நாள் முழுதும் சமூக சேவைக்கு அர்ப்பணித்த துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணனை, பார்லிமென்டில் பிரதமர் மோடி பாராட்டி பேசியது, தமிழர்கள் அனைவருக்கும் பெருமைக்குரிய தருணம்.

மொழி, ஜாதி, சமூகம், பொருளாதாரம், பாலினம் என, அனைத்து பாகுபாடுகளையும் தாண்டி, தேசத்தின் வெவ்வேறு பகுதிகளிலும் உள்ள எளிய பின்னணியை சேர்ந்தவர்களை, ஜனாதிபதி, துணை ஜனாதிபதி, பிரதமர் என உயரிய பதவிகளில், பா.ஜ.,தான் அமர வைக்கிறது. (ஐ)

# பழனிசாமி கனவு நிறைவேறியது: த.வெ.க., செங்கோட்டையன் கருத்து



"அ.தி.மு.க.,விலிருந்து என்னை வெளியேற்ற வேண்டும் என்ற, பழனிசாமியின் கனவு நிறைவேறியது,'' என, முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்தார்.

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அறிவுரைப்படியே நான் த.வெ.க.,வில் இணைந்துள்ளதாக துணை முதல்வர் உதயநிதி சொல்லி இருக்கிறார்.

அது அவர் கருத்து. ஆனால், சுய சிந்தனையின் பேரில் எனக்கு தேவையான முடிவை எடுத்திருக்கிறேன். இதில் யாருடைய நிர்பந்தமும் இல்லை.

தூய்மையான ஆட்சியை எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா தலைமையில் பின்பற்றினோம். அதனால்தான், எம்.ஜி.ஆர் இருக்கும் வரை, அவரை யாராலும் வெல்ல முடியவில்லை. ஜெயலலிதா, ஐந்து முறை முதல்வராக இருந்தார். ஆனால், கடந்த 2021ம் ஆண்டு பழனிசாமிக்கு, மக்கள் என்ன பதில் கொடுத்தனர் என்பது அவருக்கே தெரியும்.

நேற்று முன்தினம் கோபியில் பழனிசாமி நடத்திய பொதுக்கூட்டம் குறித்து, நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. எங்கிருந்தெல்லாம் ஆட்கள் கூட்டி வரப்பட்டனர் என்பது கோபி மக்களுக்கு தெரியும்.

அனைவரையும் ஒருங்கிணைக்க வேண்டும் என்பதற்காகவே, பன்னீர்செல்வம், தினகரனிடம் பேசினேன். என்னை கட்சியிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்பது, பழனிசாமி ஆசை. கச்சிதமாக அதை செய்துள்ளார். (ஐ)

# தொண்டர் குடும்பத்துக்கு பழனிசாமி ரூ.10 லட்சம் நிதி



ஈரோடு மாவட்டம் கோபியில் நேற்று முன்தினம் இரவு அ.தி.மு.க., பொதுச் செயலர் பழனிசாமி பங்கேற்ற கூட்டத்துக்கு வந்த, கொண்டையம்பாளையத்தைச் சேர்ந்த அ.தி.மு.க., தொண்டரான கட்டட தொழிலாளி அர்ஜ/னன் உயிர் இழந்தார்.

அவரது உடல், பிரேத பரிசோதனைக்கு பின், அவரது தாய் மாகாளியிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்நிலையில், நேற்று , அர்ஜ"னன் உடலுக்கு பழனிசாமி அஞ்சலி செலுத்தினார் . பின்னர், மாகாளிக்கு ஆறுதல் தெரிவித்து, 10 லட்சம் ரூபாய்க்கான வரைவோலையை வழங்கினார்.

மேலும், "தலைமை கழகம் வாயிலாக, இன்னும் 10 லட்சம் ரூபாய் வழங்குவோம்," என தெரிவித்தார். (ஐ)

–நாராயணி

# பட்டகங்களுக்குள் ஒளிந்திருக்கும் வானவில்!

"தன்பால் ஈர்ப்பாளர்களை அவர்கள் என்ன செய்வார்கள் தெரியுமா? இந்தத் தகவல் மட்டும் வெளியில் தெரிந்துவிட்டால் பிறகு உன்னால் வேலை செய்யவே முடியாது. கல்வி கற்பிக்கவும் முடியாது. நீ உருவாக்கிய அந்த உன்னதமான இயந்திரம் - அதைப் பார்க்கவே முடியாதபடி செய்வார்கள்."

ஆலன் டியூரிங்கை நோக்கி அவரது நண்பர் சொல்வதாக இமிட்டேஷன் கேம் திரைப்படத்தில் இப்படி ஒரு வசனம் வரும். செயற்கை நுண்ணறிவின் தந்தை என்று கருதப்படும்





ஆலன் டியூரிங் இல்லாவிட்டால் இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்திருக்காது. குறியீடுகளாகத் தகவல் அனுப்பிக்கொண்டிருந்த எனிக்மா என்கிற ஜெர்மானிய இயந்திரத்தின் புதிர்களை விடுவித்து, அதன் செய்திகளை எப்படிப் படிப்பது என்கிற செயல்முறையை உருவாக்கியவர் ஆலன் டியூரிங். செயற்கை நுண்ணறிவுக்கான அடிப்படை சோதனை ஒன்றையும் அவர் வடிவமைத்திருக்கிறார். இன்றுவரை அவரது சோதனை 'டியூரிங் சோதனை' என்கிற பெயரில் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், தன்பாலீர்ப்பாளர் என்கிற ஒரே காரணத்துக்காக அவர் வாழ்நாளில் அனுபவித்த வேதனைகள் கொஞ்சநஞ்சமல்ல. 1952இல் 'ஆபாச செயல்கள்' புரிந்ததற்காக அவர்மீது விசாரணை நடந்தது. அவரைச் சிறைவைக்கப் போவதாக மிரட்டினார்கள். அவரது தன்பாலீர்ப்பு வழக்கத்தை மாற்றுவதற்காக 'மருந்து' கொடுத்தார்கள். காவல்துறை மூலம் அவரைக் கண்காணித்தார்கள். அதை டியூரிங் விளக்குவதாகவும் படத்தில் ஒரு வசனம் வரும்.

"கிட்டத்தட்ட அது வேதியியல் முறையிலான காயடிப்பு போலத்தான். ஆம், என் ஹோர்மோன்களை மாற்றுவதற்காக அதைச் செய்யப் போகிறார்கள். எனக்கு வேறு வழியில்லை. சிறைக்குள் இருந்துகொண்டு என்னால் வேலை செய்ய முடியாது, இல்லையா?" என்று அவர் வருத்தத்துடன் கூறுவார்.

### டியூரிங்

இறுதியில் டியூரிங் தற்கொலை செய்துகொண்டார். அது தற்கொலையா, இல்லையா என்பதில் சில கேள்விகள் நிலவுகின்றன. எப்படிப் பார்த்தாலும் அவரது தன்பாலீர்ப்பு அவருக்கு ஆபத்தானதாக முடிந்தது என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஒரு நாட்டின் போர்க் காலத்தின்போது அத்தியாவசியப் பணியில் இருந்தால்கூட ஒருவரது பாலீர்ப்பு காரணமாக அந்த அரசாங்கமே அவரை மிரட்டியிருக்கிறது. இதுதான் பால்புதுமையினரின் நிதர்சனம். வெளியில் வந்து ஏழு நிறங்களில் ஜொலிக்க வேண்டிய பல் வானவில்கள் பட்டகத்துக்குள்ளேயே ஒளிந்துகொள்வதற்கு இந்தப் பாரபட்சம்தான் காரணம்.

மேக்னஸ் ஹிர்ஷ்ஃபீல்ட் என்பவர் ஜெர்மனியைச் சேர்ந்த ஒரு மருத்துவர், பாலியல்சார்ந்த ஆராய்ச்சிகளைச் செய்த விஞ்ஞானி, பால்புதுமையினருக்கான களப்போராளி. தன்பாலீர்ப்பு கொண்டவர்களுக்கும் திருநர்களுக்கும் உரிமைகளை வழங்க வேண்டும் என்பதற்காகக் குரல் கொடுத்தவர். பாலியல் அறிவியலுக்கான ஆராய்ச்சிக்கழகத்தையும் நிறுவியிருக்கிறார். 1920ல் இவரது ஆய்வுக்கூடம் நாஜிகளால் அடித்து உடைக்கப்பட்டது. தன்பாலீர்ப்பு என்கிற பண்பு இருக்கவே கூடாது என்கிற நாஜி





கோஷத்தின்முன் இவரது முயற்சிகள் தோற்றுப்போயின. அடிப்படைவாதிகளால் இவர் தொடர்ந்து தாக்கப்பட்டார்.

காசநோயை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிவதன்மூலம் குணப்படுத்தும் விகிதம் அதிகரிக்கும் என்கிற அறிவியல் உண்மையை நிறுவி, பலரைக் காப்பாற்றிய ஆராய்ச்சியாளர் அலன் ஹார்ட். பெண்ணாகப் பிறந்த இவர், 1917இல் கருப்பை நீக்க அறுவைசிகிச்சை செய்துகொண்டார். இவ்வாறு அறுவை சிகிச்சை செய்துகொண்ட அமெரிக்காவின் முதல் திருநம்பி இவர்தான். தனது வாழ்வை அடிப்படையாக வைத்து வுாந ருனெயரவெநன என்கிற ஒரு புனைவையும் இவர் எழுதியிருக்கிறார். ஆரம்பகாலத்தில் இவரது பால்பண்புகளால் பல்வேறு அடக்குமுறைகளுக்கு உள்ளானார்.

### ஃப்ராங்க் கெமேனி

அமெரிக்காவைச் சேர்ந்த வானியல் அறிஞரான ஃப்ராங்க் கெமேனி ஒரு மிகப்பெரிய வல்லுநர். ஏவுகணை ஆராய்ச்சியில் முக்கியப் பங்களிப்புகள் செய்தவர். தொலைநோக்கிகளின் வடிவமைப்பிலும் பல முன்னேற்றங்களை ஏற்படுத்தியவர். அமெரிக்க ராணுவத்துக்காக அவர் பணிசெய்துகொண்டிருந்தார். ஆனால் அவர் தன்பாலீர்ப்பாளர் என்று தெரிந்ததும் 1952 அவரைப் பணிநீக்கம் செய்தார்கள். அது மட்டுமல்ல, அவர் இனிமேல் அமெரிக்க அரசுப் பணிகளில் வேலை செய்யவே கூடாது என்று நிரந்தரத் தடையும் விதிக்கப்பட்டது. இத்தனைக்கும் அமெரிக்காவுக்கு அது மிகவும் நெருக்கடியான காலக்கட்டம். ஸ்புட்னிக் விண்கலத்தை ரஷ்யா வெற்றிகரமாக விண்ணில் ஏவியிருந்தது. அடுத்தது விண்வெளியில் ஏதாவது ஒரு சாதனையை நிகழ்த்த வேண்டிய கட்டாயத்தில் அமெரிக்கா இருந்தது. ஆனால், அந்தச் சாதனையைவிடவும் ஒரு தனிநபரின் தனிப்பட்ட பாலீர்ப்பைக் கட்டுப்படுத்துவதுதான் முக்கியம் என்பதாக அமெரிக்க அரசு நடந்துகொண்டது.

### லின் கான்வே

அமெரிக்காவைச் சேர்ந்த கணினி ஆராய்ச்சியாளரும் மின் பொறியாளருமான லின் கான்வே, ஐ.பி.எம் நிறுவனத்தில் வேலை செய்துகொண்டிருந்தார். அவர் ஒரு பெண்ணாக மாற விரும்பி, பால்மாற்று அறுவை சிகிச்சை செய்துகொள்ளப் போகிறார் என்று தெரிந்த உடனே அந்த நிறுவனம் அவரைப் பணிநீக்கம் செய்தது. இது நடந்தது 1968இல். எதற்கும் தளராத லின், அடுத்தடுத்து தொடர்ந்து ஆராய்ச்சிகள் மேற்கொண்டார். மைக்ரோசிப் வடிவமைப்பில் பெரிய புரட்சிகளை ஏற்படுத்தினார். பல தசாப்தங்கள் கழித்து சாவகாசமாக 2010இல் தனது தவறுக்காக ஐ.பி.எம் நிறுவனம் மன்னிப்பு கேட்டது.

இவை மிகச்சில உதாரணங்கள் மட்டுமே, அதிலும் குறிப்பாக, பால்பண்போ பாலீர்ப்போ வெளியில் தெரிந்த பின்பு பாதிக்கப்பட்ட அறிவியலாளர்களின் உதாரணங்கள். பாலீர்ப்பை வெளியில் சொல்லவே முடியாமல் நிரந்தரமாக வேறு வாழ்க்கையை வாழ்ந்து முடித்தவர்கள், பாலீர்ப்பு காரணமாகவே ஸ்டெம் துறையைத் தேர்ந்தெடுக்காதவர்கள் என்று பலர் இருந்திருக்கலாம்.

"அட, இவை எல்லாம் எப்போதோ நடந்தவைதானே" என்கிற அலட்சியத்துடன் நாம் கடந்துபோக முடியாது. இப்போதும் ஸ்டெம் துறைகளில் பால்புதுமையினர் மிகவும் குறைவு. பிரிட்டனில் இருக்கும் ஸ்டெம் துறைகளில் ஏற்கெனவே பங்களித்துக்கொண்டிருக்கும் 50ழு பேர் வெளியேற விரும்புவதாகவும், அவர்கள் தொடர்ந்து பாரபட்சத்தை எதிர்கொள்வதாகவும் ஓர் அறிக்கை தெரிவிக்கிறது. ஸ்டெம் துறைகளில் எவ்வளவு பால்புதுமையினர் இருக்கிறார்கள் என்கிற அடிப்படைத் தரவுகூட நம்மிடம் இல்லை.

பல பால்புதுமையினர், தங்களது பாலீர்ப்பு மற்றும் பால்பண்பு பற்றிய விவரங்கள் வெளியில் தெரிந்தால் பாதிப்பு வருமோ என்கிற பயத்தில், அதை வெளியிலேயே சொல்வதில்லை. வேறு சிலரோ, யாராவது எப்போதாவது இதைக் கண்டறிந்துவிடுவார்களோ என்கிற பயத்திலேயே இருக்கிறார்கள். பாலீர்ப்பு சம்பந்தப்பட்ட விவரங்களைவிட, பால்பண்பு பற்றிய விவரங்கள் உடல்மொழியிலோ ஏதோ ஒருவிதத்திலோ வெளிப்பட்டுவிடும் வாய்ப்பு அதிகம் என்பதால் அவர்களின் நடை, உடை, பாவனை எல்லாவற்றையும் மிகவும் கவனமாக அமைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் சிலருக்கு இருக்கிறது.

### ஆலன் ஹார்ட்

ஸ்டெம் துறைகளில் பால்புதுமையினருக்கான உரிமைகளுக்காகக் குரல் கொடுத்துவரும் ஆல்ஃப்ரெடோ காப்ரெட்டி, 'தன்பாலீர்ப்பாளர் போல நடந்துகொள்ளாதீர்கள் என்று தனது மேலாளர் சொன்னதாக ஒருவர் என்னிடம் சொல்லி வருத்தப்பட்டார். தன்பாலீர்ப்பாளர் போல நடந்துகொள்வது என்றால் என்ன? இந்த மனநிலை எங்கிருந்து வருகிறது? என்று கேள்வி எழுப்புகிறார். "நல்ல அறிவியலாளர், நல்ல தொழில்நுட்பவியலாளர் என்பவர், எதிர்பாலீர்ப்பு கொண்ட வெள்ளை இன ஆணாக இருப்பார் என்கிற பொதுவான ஒரு நம்பிக்கை நிலவுகிறது. இது அபத்தமானது" என்கிறார்.

ஸ்டெம் துறைக்குள் வரும் பல பால்புதுமையினர், அங்கு நிலவும் மோசமான (7ஆம் பக்கம் பார்க்க..)

# ஜி20 போர்க்களமாக மாறியது: டிஜிட்டலிலும் தென்ஆப்ரிக்காவின் பெயரை நீக்கினார் டிரம்ப்




2026ம் ஆண்டில் ஜி20 மாநாடு நடத்த உள்ள அமெரிக்க அதிபர் டிரம்ப் தென் ஆப்ரிக்காவுக்கு அழைப்பில்லை என்பதை தெளிவாக கூறிவிட்டார். தற்போது அவர் வெப்சைட் உள்ளிட்ட டிஜிட்டலிலும் கூட தென்ஆப்ரிக்காவின் பெயரை நீக்கிவிட்டார்.

ஜி-20 நாடுகள்என்பது பொருளாதார ஒத்துழைப்புக்கான ஒரு சர்வதேச அமைப்பு. இதில், இந்தியா, அமெரிக்கா, தென் ஆப்ரிக்கா உள்ளிட்ட நாடுகள் இடம் பெற்றுள்ளன. நடப்பாண்டுக்கான ஜி - 20 நாடுகளின் தலைமை பொறுப்பை தென் ஆப்ரிக்கா வகித்தது. அடுத்தாண்டுக்கான பொறுப்பு அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்பட்டது. இதனால், நேற்று டிச., 1ம் தேதி முதல் அடுத்தாண்டு நவம்பர் 30ம் தேதி வரை, அடுத்தாண்டுக்கான ஜி - 20 தலைமை பொறுப்பை அமெரிக்கா ஏற்றது.

அடுத்தாண்டு புளோரிடா மாகாணம் மியாமியில் நடைபெறும் ஜி - 20 உச்சி மாநாட்டில் பங்கேற்க, தென் ஆப்ரிக்காவுக்கு அழைப்பு விடுக்கப்படாது என அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்தார். உலகின் எந்தவொரு அமைப்பிலும் உறுப்பினராக இருக்க தகுதியற்ற நாடு என்பதை தென் ஆப்ரிக்கா நிரூபித்துவிட்டதாக டிரம்ப் கடுமையாக விமர்சித்தார்.

தற்போது ஜி20 சமூக வலைதளத்தில் டிரம்பின் கருப்பு, வெள்ளை நிறப்படம் இடம்பெற்றுள்ளது. அதில் மியாமி 2026, சிறந்தது இன்னும் வரவில்லை என குறிப்பிடப்பட்டு உள்ளது. டிஜிட்டலிலும் கூட தென்ஆப்ரிக்கா பெயர் நீக்கப்பட்டுள்ளதால், ஜி -20 அமைப்பு போர்க்களமாக மாறி உள்ளது. புதிய ஜி20 வலைத்தளம் படம் சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது.

மனித உரிமை மீறல்கள் நடப்பதாகவும், வெள்ளை இன மக்களுக்கு எதிராக பாகுபாடு காட்டுவதாகவும் கூறி, தென் ஆப்ரிக்காவில் சமீபத்தில் நடந்த உச்சி மாநாட்டை, அமெரிக்க அதிபர் டிரம்ப் புறக்கணித்தார். ஜி - 20 மாநாட்டின் முடிவில், தலைமை பொறுப்பை அமெரிக்க துாதரகத்தின் மூத்த பிரதிநிதியிடம் ஒப்படைக்க தென் ஆப்ரிக்கா மறுத்துவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## உக்ரைன்–ரஷ்யா பேச்சுவார்த்தையில் முன்னேற்றம்: அமெரிக்கா




உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையேயான அமைதி ஒப்பந்தம் குறித்து டிரம்ப் நிர்வாகம் மிகவும் நம்பிக்கையுடன் இருக்கிறது என வெள்ளை மாளிகையின் பத்திரிகை செயலாளர் கரோலின் லீவிட் தெரிவித்துள்ளார்.

இது குறித்து வெள்ளை மாளிகையின் பத்திரிகை செயலாளர் கரோலின் லீவிட் கூறியதாவது: தேசிய காவல்படை வீரர்கள் மீது தாக்குதல் நடத்தியவன் சட்டத்தின் முன் நிறுத்தப் படுவதையும், வழக்கு தொரடப்படுவதையும், கடும் தண்டனை வழங்கப்படு வதையும் அமெரிக்க நிர்வாகம் உறுதி செய்யும்.

இந்த தாக்குதல் நடத்தியவன் பைடன் நிர்வாகத்தின் கீழ், செப்டம்பர் 2021ல் அமெரிக்காவுக்குள் நுழைந்து உள்ளான். அதிபர் டிரம்ப் உடல் பரிசோதனையின் போது, உடல் ஆரோக்கியத்துடன் இருக்கிறார்.

புளோரிடாவில் நடந்த பேச்சுவார்த்தைக்குப் பிறகு உக்ரைன் அமைதி ஒப்பந்தம் குறித்து டிரம்ப் நிர்வாகம் நம்பிக்கையுடன் உள்ளது. அதிபர் டிரம்பும், அவரது குழுவும் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்காக, மிகவும் கடினமாக உழைத்து வருகின்றனர்.

போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான டிரம்பின் திட்டம் குறித்து, அமெரிக்க அதிகாரிகளுடன் இரண்டு நாட்கள் நடந்த பேச்சுவார்த்தைகளில் குறிப்பிட்ட முன்னேற்றம் எட்டப்பட்டு உள்ளது. இவ்வாறு கரோலின் லீவிட் கூறினார். (ஐ)




## அடுத்த 20 ஆண்டில் வேலை என்பது விருப்ப தேர்வாக மாறி விடும்: மஸ்க்

ஏ.ஐ., ரோபோட்டிக்ஸ் தொழில்நுட்பம் வேகமாக வளரும் சூழலில், இன்னும் 20 ஆண்டுகளுக்குள் வேலை என்பது விருப்ப தேர்வாக மாறி விடும் என, எலான் மஸ்க் கணித்துள்ளார்.

ஜீரோதா இணை நிறுவனர் நிகில் காமத் நடத்திய நேர்காணலில், எலான் மஸ்க் தெரிவித்ததாவது: ஏ.ஐ., மற்றும் ரோபோட்டிக்ஸ் வளர்ச்சியால், வேலை செய்ய வேண்டிய கட்டாயம் எதிர்காலத்தில் மனிதர்களுக்கு இருக்காது. வேண்டுமானால் ஒரு விருப்ப தேர்வாக வேலை இருக்கலாம். மனிதர்கள் கடையில் காய்கறிகளை எளிதில் வாங்க முடியும் என்றாலும், வீடுகளில் தோட்டம் அமைத்து வளர்ப்பது போல் தனி விருப்பமாக வேலை இருக்கும். அதுவும் கிட்டத் தட்ட ஹாபி ஆக இருக்கும்.

இந்த அளவுக்கு, அனைத்து தொழிலாளர் பணியிடங்களிலும் நவீன தொழில்நுட்பம் முழுதுமாக பரவியிருக்கும். எனினும், ஸ்டார்ட்அப் மற்றும் கடினமான வேலைகளில், சீரியசான வேலை நேரம் என்பது அத்தியாவசியமாகவே இருக்கும். திறமையான இந்தியர்களால் பலன் பெற்ற நாடு அமெரிக்கா. ஆனால், கடுமையான விசா விதிகளால் தற்போது இந்தியர்களின் கனவில் மாற்றம் ஏற்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஐ)

## ‘அயர்ன் பீம்’ ஏவுகணை எதிர்ப்பு தொழில்நுட்பம் இஸ்ரேல் ராணுவத்தில் விரைவில் இணைகிறது

தங்கள் நாட்டை நோக்கி வரும் வான்வழி அச்சுறுத்தல்களை முறியடிக்கும், ‘அயர்ன் பீம்’ ஏவுகணை எதிர்ப்பு தொழில்நுட்பம், இம்மாத இறுதிக்குள் இஸ்ரேல் ராணுவத்துக்கு கிடைக்க உள்ளது.

மேற்காசிய நாடான இஸ்ரேல், ராணுவத் தொழில்நுட்பங்களில் முன்னிலையில் உள்ளது. ஏற்கனவே அதன், ‘அயர்ன் டோம்’ என்ற, ஏவுகணை எதிர்ப்பு தொழில்நுட்பம் மிகவும் பிரபலம். இதைத் தவிர, வேறு சில ஏவுகணை எதிர்ப்பு தொழில்நுட்பங்களையும் பயன்படுத்தி வருகிறது.

பாலஸ்தீனத்தின் காசாவை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஹமாஸ் பயங்கரவாத அமைப்புடன், இரண்டு ஆண்டுகள் நீடித்த போரில், இதனால்தான், இஸ்ரேலுக்கு பெரிய அளவில் பாதிப்பு ஏற்படவில்லை.

ஹமாசுக்கு ஆதரவாக, லெபனான், ஜோர்டான் என பல அண்டை நாடுகளில் உள்ள பயங்கரவாத அமைப்புகள் நடத்திய தாக்குதல்களையும் இஸ்ரேலால் சமாளிக்க முடிந்தது. தன் வான் பாதுகாப்பு முறைகளை மேம்படுத்தும் வகையில், ‘அயர்ன் பீம்’ எனப்படும் லேசர் தொழில்நுட்பத்துடன் கூடிய பாதுகாப்பு கவசத்தை உருவாக்கும் முயற்சி நடந்தது. தற்போது அது முடிவடைந்துள்ளதால், இம்மாத இறுதியில், இஸ்ரேல் ராணுவத்துக்கு ஒப்படைக்கப்பட உள்ளதாக, இஸ்ரேல் ராணுவ உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அயர்ன் பீம் எனப்படும் இரும்பு ஒளிக்கற்றை என்றழைக்கப்படும் புதிய தொழில்நுட்பம், லேசர் வாயிலாக எதிரியின் ஏவுகணைகளை அழிப்பதாகும். இதை நிறுவுவதற்கு மட்டுமே செலவாகும் பயன்பாட்டுக்கு பெரிய அளவில் செலவாகாது.

அயர்ன் பீம் முறையில், லேசர்கள் பயன்படுத்தி, எதிரியின் ஏவுகணைகள் அழிக்கப்படும். இதனால், கிட்டத்தட்ட பயன்பாட்டு செலவே இருக்காது என்று கூறப்படுகிறது. மேலும், இந்த புதிய முறை, மிகவும் நவீனமானதாக இருக்கும். மிகவும் குறைந்த துாரத்தில் இருந்து, பல கி.மீ., துாரத்தில் உள்ள எதிரியின் ஏவுகணைகளை அடையாளம் காண முடியும். இதைத் தவிர, மிகவும் துல்லியமாக தாக்குதல் நடத்தி, எதிரியின் ஏவுகணைகள் அழிக்கப்படும். இதற்காக, 4,460 கோடி ரூபாய் செலவிடப்பட்டு உள்ளது. (ஐ)



## யாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கைதானவர்கள் 20 வயது தொடக்கம் 25 வயதுக்குட்பட்டோர் எனவும் நயினாதீவு, கொக்குவில், தெல்லிப்பழைப் பகுதிகளை சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கு உடந்தையாக இருந்த மேலும் இருவரைத் தேடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளுக்குப் பின்னர் கைதான 6 பேரையும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## இடைநிறுத்தப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ அறிவித்துள்ளார்.

எனினும், ஜனவரி மாதம் பரீட்சை நடைபெறும் திகதிகளை அவர் அறிவிக்கவில்லை.

## மன்னார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைமையில் இடம்பெற்றது. டித்வா புயலால் ஏற்பட்ட பேரிடர் நிலையில், உடனடியாக மேற்கொள்ள வேண்டிய அவசர நடவடிக்கைகள், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பல துறைகளின் ஒருங்கிணைப்புத் தேவைகள் குறித்து விரிவாக ஆராய்வதே இந்தக் கலந்துரையாடலின் நோக்கமாகும்.

நலன்புரி மையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு அவசர மருத்துவ சேவைகள் வழங்கல், தண்ணீர் மாசுபாடு தடுப்பு மற்றும் நுளம்புப் பெருக்குக் கட்டுப்பாடு, குழந்தைகள், கர்ப்பிணிகள், முதியவர்கள் ஆகியோருக்கான சிறப்பு சுகாதார பராமரிப்பு, இடருக்குப் பிந்தைய தொற்றுநோய் அபாயங்களைத் தடுக்கும் நடவடிக்கைகள் போன்ற சுகாதாரத் துறை தொடர்பான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

புயலால் சேதமடைந்த பயிர்களுக்கான ஆரம்ப மதிப்பீடுகள், கால்நடை வளர்ப்பில் ஏற்பட்ட சேதங்களுக்கு ஆதரவுத் திட்டங்கள், சேதமடைந்த விவசாய உட்கட்டமைப்புகளின் மறுசீரமைப்பு தொடர்பிலும் ஆராயப்பட்டன.

நீரேற்ற வாய்க்கால்கள், அணைகள் மற்றும் தடுப்பணைகளின் பாதுகாப்பு நிலை ஆய்வு, வெள்ளநீர் வெளியேற்றத்துக்கான அவசர நடவடிக்கைகள், நீர்ப்பாசனத் திட்டங்களில் நீர் மேலாண்மைக் கட்டுப்பாடுகள் தற்போது நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் அடிப்படை வசதிகள், உணவு, குடிநீர், சுகாதாரம், சத்துணவு தொடர்பிலும் அரச அதிபர் கேட்டறிந்ததுடன், தொடர்ந்து கண்காணிக்க வேண்டிதையும் வலியுறுத்தினார்.

அனர்த்த சூழ்நிலையில் முப்படையினர், பொலிஸ், கடற்படை அதிகாரிகள் மற்றும் துறைசார்ந்த பல்வேறு திணைக்களங்கள் வழங்கும் அர்ப்பணிப்புமிக்க சேவைகள் பாராட்டப்பட்டன. மேலும், சீரற்ற வானிலை தொடர்பான அவசர நிலைகளை எதிர்கொள்ள பொதுமக்கள் எப்போதும் விழிப்புடன் இருக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர், மாவட்ட மேலதிக அரச அதிபர்கள், நகர சபை பிரதேச உறுப்பினர்கள், பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், துறைசார்ந்த திணைக்களத் தலைவர்கள், முப்படையினர், பொலிஸ் அதிகாரிகள், ஒருங்கிணைப்புக் குழு இணைப்பாளர், அனர்த்த முகாமைத்துவப் பிரிவு உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# பாடசாலைகள், பல்கலைகள் மீண்டும் எப்போது ஆரம்பம்?

கொழும்பு, நவ. 02

மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களில் அனர்த்த நிலைமையை மதிப்பாய்வு செய்த பின்னர், போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் மின் தடைகளால் பாதிக்கப்படாத மாகாணங்கள் மற்றும் மாவட்டங்களில் உள்ள பாடசாலைகள் மட்டும் டிசம்பர் 16 ஆம் திகதி மீண்டும் திறக்கப்படும் என்று கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ தெரிவித்துள்ளார்.

ஏனைய பகுதிகளில் உள்ள பாடசாலைகளை மீண்டும் திறப்பது குறித்து சம்பந்தப்பட்ட மாகாண மற்றும் மாவட்ட அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து விரைவில் முடிவுகள் எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பேரிடர்களால் பாதிக்கப்படாத பல்கலைக்கழகங்கள், தேசிய கல்வியியற் கல்லூரிகள் மற்றும் தொழிற்கல்வி நிறுவனங்கள் டிசம்பர் 8 ஆம் திகதி மீண்டும் திறக்கப்படும் என்றும் நாலக கலுவெவ மேலும் தெரிவித்துள்ளார்.

# ரூ.100 இலட்சம் நன்கொடை வழங்கிய "தாவூதி போரா" சமூகம்



சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் அரசாங்கத்தின் செயற்திட்டத்துடன் இணைந்ததாக இலங்கை தாவூதி போரா சமூகத்தினர் 100 இலட்சம் ரூபா நன்கொடை வழங்கியுள்ளனர்.

உலகளாவிய போரா சமூகத்தின் ஆன்மீகத் தலைவர் செய்யிதினா முபத்தல் சைபுத்தீனின் சார்பாக இலங்கை தாவூதி போரா சமூகத்தின் தலைவர் இப்ராஹிம் சயினியினால் இன்று செவ்வாய்க்கிழமை (02) அன்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவிடம் இதற்கான காசோலை கையளிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதற்கும் நிவாரணம் வழங்குவதற்கும் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்கு போரா சமூக பிரதிநிதிகள் தங்கள் பாராட்டுகளைத் தெரிவித்ததோடு அதற்காக தமது நன்றியையும் தெரிவித்தனர். (ஐ)

# பட்டகங்களுக்குள்...

சூழலாலேயே வெளியேறிவிடுகிறார்கள் என்று ஓர் ஆராய்ச்சி சொல்கிறது. "ஸ்டெம் துறைகளில் பெண் வெறுப்பு மற்றும் பாலின ஏற்றத்தாழ்வு கொண்ட, எதிர்பாலீர்ப்பை மட்டுமே ஏற்றுக்கொள்கிற ஒரு மனநிலை இருக்கிறது. பாலினம் சார்ந்த ஸ்டீரியோடைப்புக்குள் வருபவர்கள் மட்டுமே இதில் சமாளிக்க முடியும்" என்கிறார் ஆய்வு நடத்திய ப்ரைஸ் ஹ்யூஸ். ஸ்டெம் துறைகளில் நிலவும் ஆதிக்கத்தை உடைக்க வேண்டும் என்று இவர் வலியுறுத்துகிறார். ஸ்டெம் துறைகளில் பெண்கள் சந்திக்கும் பிரச்னைகளாவது ஓரளவு பேசப்படுகின்றன. ஆனால், பால்புதுமையினர் இந்தத் துறையில் எதிர்கொள்ளும் சவால்கள் பொதுவெளிக்கே வருவதில்லை.

இந்தியாவிலும் கிட்டத்தட்ட இதே நிலை நிலவுகிறது. பல ஆய்வாளர்கள் இதை ஆராய்ந்திருக்கிறார்கள். "தனிப்பட்ட வாழ்வில் எனது பால்புதுமையையும், கல்விப்புலத்தில் எனது ஆராய்ச்சியையும் சமாளிக்க வேண்டியிருக்கிறது, இது மிகவும் கொடுமையானது" என்கிறார் பெயர் வெளியிட விரும்பாத ஓர் இந்திய ஆண் விஞ்ஞானி. இந்தியா முழுவதிலும் உள்ள பால்புதுமை ஸ்டெம் பங்களிப்பாளர்களிடம் ஆய்வு நடத்தியதில், பால்புதுமையினராக இருப்பதாலேயே ஸ்டெம் துறையில் மன உளைச்சல் ஏற்படுகிறது என்று 38% பேர் சொல்லியிருக்கிறார்கள். தேவையற்ற, தவறான கமெண்ட்டுகள், நகைச்சுவை என்கிற பெயரில் காயப்படுத்துவது, தேவையற்ற ஆலோசனை ஆகியவற்றை தினசரி எதிர்கொள்வதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். "என்னைப் பற்றிய விவரம் வெளியில் தெரிந்துவிட்டால் எனக்குத் திறமை போதாது என்று நினைப்பார்களோ என்று பயப்படுகிறேன்" என்று ஒருவரும், "என்னைப் பற்றி யாருக்கும் தெரியாது, தெரிந்துவிடுமோ என்றும் தினம் தினம் பயப்படுகிறேன்" என்று வேறு ஒருவரும் சொல்கிறார்கள். "ஸ்டெம் துறைகளில் இருக்கும் பாடத்திட்டங்களே பால்புதுமையினருக்கு எதிரானவை. குறிப்பாகத் தன்பாலீர்ப்பை இவை ஒரு பிறழ்வாகப் பார்க்கின்றன" என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்களான அகாஷ ராவும் ப்ரித்வி/ம். ஸ்டெம் துறையில் பால்புதுமையினராக இருப்பதால் ஏற்படும் மன உளைச்சலுக்குப் போதுமான உதவி கிடைப்பதில்லை, குறிப்பாக மனநல மருத்துவத்துக்குப் பணம் இல்லை என இந்திய ஸ்டெம் துறைகளில் இருக்கும் பால்புதுமையினரில் 53% பேர் சொல்லியிருக்கிறார்கள்.

விஞ்ஞானியான கே. பிட்டூ ஒரு திருநர். இவர் தனது பணியிடத்தில் திருநர்களுக்கான வேலைவாய்ப்பை உறுதி செய்வதற்குப் பல முயற்சிகள் எடுத்துவருகிறார். பிட்டூ, ஏ. மணி போன்ற திருநர்கள் இந்திய ஸ்டெம் துறைகளில் இருப்பது சில பல்கலைக்கழகங்களில் திருநர் வேலைவாய்ப்புக்கான பெரிய கதவைத் திறந்து வைத்திருக்கிறது. உண்மையில் வேறு எந்தத் துறையையும்விட, ஸ்டெம் துறையில்தான் பால்புதுமையினரை ஏற்றுக்கொள்வதும் அங்கீகரிப்பதும் அதிகமாக இருக்க வேண்டும். பால்புதுப் பண்பு இயற்கையானது என்பதை அறிவியலாளர்கள்தான் உலகுக்கே எடுத்துச் சொல்ல வேண்டும். ஆனால், நிலைமை தலைகீழாக இருக்கிறது. "பார்ப்பதற்குக் கலைந்த தலையுடன், வெவ்வேறு நிறங்களில் சாக்ஸ் அணிந்துகொண்டிருக்கிறார் என்று அவரை ஏதோபோல் நினைத்துவிடாதீர்கள். க்வாண்டம் இயற்பியலில் அவர்தான் உச்ச விஞ்ஞானி, அவரை நாம் கொண்டாட வேண்டும்" என்று புறத்தோற்றத்தைக்கூட வெளியில் தள்ளிவிட்டு ஆராய்ச்சியைக் கொண்டாடும் ஸ்டெம் துறை, ஒருவரது தனிப்பட்ட வாழ்வின் தேர்வுகளை வைத்து அவரை ஒதுக்குவது மிகப்பெரிய நகைமுரண்.

திருநர்களை சமூகம் ஓரளவு ஏற்கத் தொடங்கியிருக்கிறது, பால்புதுமையினரில் அவர்களுக்குக் வேலைவாய்ப்பு சாத்தியங்கள் சற்றே அதிகம் என்பது உண்மை. ஆனால், அவர்களது சான்றிதழ்கள்ஃபெயர் அடையாளங்கள் ஆகியவற்றை அங்கீகரிக்கவும் எல்லா வழிகளும் சரியாக இருந்தால் மட்டுமே அவை அனைவருக்கும் பயன்படும். பால்மாற்றத்துக்கு முன்பான தன்னுடைய பெயரையே பல்கலைக்கழகம் பயன்படுத்தியது எனவும், தனது பால்பண்பை அது அங்கீகரிக்கவில்லை எனவும் தனது ஆரம்பகட்ட ஸ்டெம் வாழ்வைப் பற்றி கே. பிட்டூ வருத்தத்துடன் கூறியிருக்கிறார். இன்னும் பல பல்கலைக்கழக வளாகங்களில் பாலின சார்பற்ற கழிப்பறைகள் இல்லை. அப்படியானால் ஒருவர் என்ன கழிப்பறையைப் பயன்படுத்த வேண்டும் என்பதையும் நிர்வாகம்தான் சொல்லும். இவையெல்லாம் ஒருவரை வேலைக்கே வரவிடாமல் தடுக்கும் அளவுக்கு மன உளைச்சல் தருகிற மிகப்பெரிய தர்ம சங்கடங்கள்.

தன்பாலீர்ப்பாளர்களின் பிரச்சினை வேறுவிதமானது. அவர்களது பாலீர்ப்பு பற்றிய விவரங்கள் வெளியில் தெரிந்த பின்பு ஸ்டெம் துறை அவர்களை நடத்தும் விதமே வேறு. தன்பாலீர்ப்பு கொண்ட பெண்களைவிடவும் தன்பாலீர்ப்பு கொண்ட ஆண்கள் சமூகத்தில் மிக மோசமான பாரபட்சத்துக்கு ஆளாகிறார்கள். இது ஸ்டெம் துறைக்குள்ளும் தொடர்கிறது. தன்பாலீர்ப்பு கொண்டவர் என்று தெரிய வந்ததாலேயே அடுத்த நாள் மாணவர் விடுதியிலிருந்து வெளியேற்றப்பட்ட ஒரு ஸ்டெம் மாணவனை எனக்குத் தெரியும். அதே விடுதியில் கிட்டத்தட்ட வாரம் ஒருமுறை யாருடனாவது சண்டையிட்டு அடிதடியில் ஈடுபடுகிற இன்னொருவர் இருந்தார். அவருக்கு அடிக்கடி எச்சரிக்கையும் சஸ்பென்ஷனும் மட்டும்தான் கிடைக்கும். அவரை வெளியேற்ற வேண்டும் என்று நிர்வாகம் ஒருபோதும் நினைக்கவில்லை.

இத்தனைக்கும் மத்தியில் சில நம்பிக்கைகள் துளிர்விட்டிருக்கின்றன. சென்ற ஆண்டு இந்தியாவில் நடந்த இரண்டு முக்கியமான அறிவியல் மாநாடுகளில் பால்புதுமையினருக்கான சிறப்பு சந்திப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. பல ஸ்டெம் துறைகளில் பால்புதுமையினருக்கான உதவிக்குழுக்களை யாராவது முன்னெடுத்து ஏற்பாடு செய்கிறார்கள், நேரடியாக இல்லாவிட்டாலும் திறன்பேசி மூலமாகக் கிடைக்கும் நம்பிக்கை மற்றும் ஆதரவையாவது பல பால்புதுமையினர் இதன்மூலம் பெறுகிறார்கள். திருநர் பற்றிய பழைமைவாதக் கருத்துகளை மாற்றுவதற்காகப் பல மருத்துவதுறை செயற்பாட்டாளர்கள் குரல் கொடுக்கிறார்கள். பாடத்திட்டத்திலும் இந்த மாற்றங்களைக் கொண்டுவரும் முயற்சிகள் நடக்கின்றன. இவையெல்லாம் இப்போதுதான் வருகிறது என்று வருத்தப்படுவதைவிட, இப்போதாவது வருகிறதே என்ற ஆறுதலுடன் முன்னோக்கிப் பயணிக்க வேண்டியதுதான். கல்வி நிறுவனங்கள் மற்றும் ஆய்வுக்கழகங்களில் பாலினச் சார்பற்ற கழிப்பறைகளை நிறுவுவது, வழமையான குடும்ப அமைப்புகளுக்குள் இல்லாத பால்புதுமையினருக்கான திட்டங்களைக் கொண்டு வருவது, நிதி ஒதுக்கீடு, பாரபட்சங்களுக்கு அப்பாற்பட்ட பணித்தேர்வு ஆகியவற்றையும் செய்ய வேண்டும்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.12.2025 வெளியிடப்பெற்றது.